

Baptism at Theni DT



Presenting the Bible



Dharapuram Bible Student



Ladies` Class at Salem




SriLanka Program



SriLanka Program

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Oct. 2016

*Our Radio & TV Programs*
Sri Lanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M & Nambikkai TV
on Monday &
Saturday 7.30 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

**To**

Postman Remarks (If Undelivered):

- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

மரம் 16 அக்டோபர் 2016 கனி 11

## வெட்டுக்கிளி



## Locust

**THE WORD OF CHRIST**

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" - கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்



By Dream-Wallpaper.com



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Puthuyugam TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Tuesday 6.15-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**
**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
### மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ், பவுலா பேட்ஸ்
அவர்களின் செய்தி மற்றும்
வேதபாடம்,
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 194

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை செப்டம்பர் மாத இதழில்!


1. நான் உமது கண்களுக்கு எதிரே இராதபடிக்குத் தள்ளப்பட்டேன்; ஆகிலும் இன்னமும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன் என்ற தீர்க்கன் யார்?
2. கிறிஸ்து இயேசுவினிமித்தம் பவுலோடு எப்பாப்பிராவும் காவலில் வைக்கப்பட்டிருந்தாரா?
3. நானோ, யாக்கோபுக்கு அவன் மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன் என்ற தீர்க்கன் யார்?
4. பழிவாங்குதல் எனக்குறியது நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறாரா?
5. வெறுமையாக்குகிறவர்கள் அவர்களை வெறுமையாக்கி, அவர்களுடைய திராட்சக்கொடிகளைக் கெடுத்துப்போட்டாலும், கர்த்தர் யாக்கோபின் மகிமையைத் திரும்பிவரப்பண்ணுவதுபோல், இஸ்ரவேலின் மகிமையையும் எப்படி வரப்பண்ணுவார்?
6. தேவன் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொண்டாரா?
7. நான் தான், என்னைத் தவிர வேறொருவரும் இல்லை என்று தன் இருதயத்தில் சொல்லி, நிர்விசாரமாய் வாழ்ந்து களிகூர்ந்த நகரம் எது?
8. நாம் பாவங்களுக்குச் செத்து எதற்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின்மேல் சுமந்தார்?
9. அவர்களுடைய கைகளின் எல்லாக் கிரியைகளும் அப்படியே இருக்கிறது, அவர்கள் அங்கே கொண்டுவந்து படைக்கிறதும் தீட்டுப்பட்டிருக்கிறது என்ற தீர்க்கன் யார்?
10. உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி எப்படியிருங்கள் என பேதுரு சொல்லுகிறார்?

**போட்டியாளர்கள் கவனிக்க...** வேதாகமம் பரிசு

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை 100 பேருக்கு அறிமுகம் செய்கிறவர்கள் <u>இதழை படிக்க விருப்பமில்லாதவர்களுடைய முகவரிகளை எழுதி அனுப்பவேண்டாம்</u>. நன்றி. – ஆசிரியர்

**இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்** 12

நாள்: 29.10.2016 சனிக்கிழமை
நேரம்: காலை 10.00மணி
இடம்: கிறிஸ்துவின் சபையார் கூடமிடம்
அமிர்தாளையா காம்ளக்ஸ்
செட்டிகுளம் ஜங்சன்,
நாகர்கோவில் - 629 002
தொடர்புக்கு:
சகோ. சாலமோன் செல்வராஜ்
மொபைல்: 9047697001



- பழைய பிரமாணத்தின்படி புசிக்கத்தக்கது - லேவி.11:22
- யோவான்ஸ்நானகனின் உணவாக இருந்தது - மத்.3:4.
- மோசே பார்வோனுக்கு முன்பாக பேசினபோது பத்து வாதைகள் எகிப்தில் உண்டானது அவைகளில் வெட்டுக்கிளியும் ஒன்று - யாத்.10:13-15.
- இவைகளுக்கு இராஜா இல்லாமையால் பவுஞ்சு பவுஞ்சாய் புறப்படும் - நீதி.30:27.
- வெட்டுக்கிளி சாதுவான ஒன்று - யோபு 39:20
- வெளிப்படுத்தல் 8:6-9:21 வரை வெட்டுக்கிளிகளுக்கு ஒப்பாக சொல்லப்பட்டிருக்கிறது.



சிறுவர் பகுதி

## முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்

*வேதபகுதி: அப்போஸ்தலர் 9:1-20*



**இ**ந்த வாக்கியத்தை சொன்னவர் யார் என்று தெரியுமா? ஆண்டவராகிய இயேசு தான் ஆம், அவர் சவுலைப் பார்த்து சொன்னார். ஒரு முறை சவுல் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும் படி பிரதான ஆசாரியரிடத் திற்குப் போய் நிருபங்களைக் கேட்டு வாங்கினான். பின்பு பிரயாணமாய்ப் போகும்போது தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது: அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது ; சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான் அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான் அதற்குக் கர்த்தர் : நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்.

அவனோ நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டான். அதற்குக் கர்த்தர் நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். அவனுடனே வந்தவர்கள் சத்தத்தைக் கேட்டு ஒருவரையும் காணாமல் பிரமித்து நின்றார்கள். சவுல் தரையிலிருந்தெழுந்து தன் கண்களைத் திறந்தபோது ஒருவரையும் காணவில்லை அப்பொழுது கைலாகு கொடுத்து அவனை நடத்தினார்கள். மூன்று நாள் பார்வையில்லாதவனாய் சாப்பிடாமல் இருந்தான். பின்பு அனனியா வரவும் அவன் கையைவைத்தவுடனே பார்வையடைந்து ஞானஸ்நானம் பெற்று தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று பிரசங்கித்தான். என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா? கர்த்தருடைய மார்க்கத்தை எதிர்த்தவன் அவருக்கே ஊழியக்காரனாய் மாறினான். அவன் தான் பவுல்.

கிறிஸ்தவ மார்க்கத்தை அழிக்கவேண்டும் என்று நினைத்த சவுலை கர்த்தர் எப்படி சந்தித்தார் பார்த்தீர்களா? முள்ளில் உதைத்தால் யாருக்கு வலிக்கும் உதைத்தவர்களுக்குத்தானே, அதைத்தான் கர்த்தர் முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்.


தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். **9443558041**





**மனப்பாட வசனம்:**

மனப்பாட வசனம்:
“ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால்
புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்”...(2கொரிந்தியர்5:17)




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 16 அக்டோபர் -2016 கனி - 11


ஆசிரியருரை

## கர்த்தர் கொடுப்பதும், பிசாசு கொடுப்பதும்
## The Things God Gives and Devil Gives




முதலாவது கர்த்தர் கொடுக்கும் மூன்று காரியங்களைப் பற்றி தியானிப்போம். "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது" (1கொ.13:13). இவைகளை கர்த்தர் கொடுக்கின்றாரா? என்ற கேள்வி உங்களில் எழும்பும். ஆம், இவைகள் கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆவிக்குரிய ஆயுதங்களே என்றே சொல்லலாம். உலகப்பிரகாரமான ஆயுதங்களை எடுக்கிறவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கமுடியாது. ஆண்டவரை பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் தேவையானவற்றை ஆண்டவர் நம்மில் உண்டாக்குகிறார். "மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என்கிறார் பவுல் (எபி.12:1). நம்மிலே விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரும் ஆண்டவர் இயேசுவே என்று காண்கிறோம். உங்களில் ஆண்டவர் துவக்கியுள்ள அந்த விசுவாசத்தை நீங்கள் முடிவுபரியந்தமும் காத்துக்கொள்ளவேண்டிய பொறுப்புடையவராயிருக்கிறீர்கள். இந்த விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. காணாததை விசுவாசிக்கும் விசுவாசம் ஆபிரகாமிடம் இருந்தது. அவர் விசுவாசிகளின் தகப்பன் என்று அழைக்கப்பட்டார். விசுவாசமுள்ளவர்கள் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமோடு சேர்ந்து ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். கர்த்தர் உங்களில் துவக்கும் இந்த விசுவாசத்தை முடிவுபரியந்தமும் காத்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**இரண்டாவது நம்பிக்கை.** இந்த நம்பிக்கையை ஆண்டவர் நம்மில் ஏற்படுத்துகிறார். ஆண்டவருடைய பிள்ளைகள் நம்பிக்கையை தங்களில் வளர்த்துக்கொள்கிறார்கள். பேதுரு நம்பிக்கையை பற்றி சொல்லும்போது; "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" என்கிறார் (1பேது.3:15). ஆண்டவர் எவரையும் பலவந்தம்பண்ணி, என்பின்னே வாருங்கள் என்று அழைக்கவில்லை. "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்றார். எனவே பேதுரு மேற்கண்ட வசனத்தில் குறிப்பிடும்போது

உங்களிலிருக்கிற நம்பிக்கையை குறித்து என்று எழுதுவதை கவனியுங்கள். நீங்கள் எந்த அளவு அவரை ஏற்றுக்கொண்டு நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கிறீர்கள்? அந்த நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக்கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும், உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் என்று எழுதுகிறார். ஒருவர் நம்முடைய நம்பிக்கையை பற்றிகேட்கும்போது அது எப்படிப்பட்டது என்பதை நாம் சொல்லக்கூடிய விதத்திலிருந்தே தெரிந்துகொள்வார்கள். இந்தவிதமான நம்பிக்கை வேதவசனங்களைப்படிப்பதன் மூலமாகவும், அநேக சாட்சிகள் மூலமாகவும், கர்த்தராலும் நமக்கு உண்டாகிறது. இந்த நம்பிக்கை நம்மை நித்தியத்திற்கு நேரே வழிநடத்தும்.

**மூன்றாவது அன்பு.** விசுவாசம், நம்பிக்கை, இம்மூன்றில் அன்பே பெரியது என வாசித்தோம். ஆம், அன்பு கர்த்தருடைய கட்டளையின் நிறைவாக இருக்கிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில்லாதவன் தேவனை அறியான் என்றெல்லாம் படிக்கிறோம். "அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்" (1யோவா.2:5). அன்பு எங்கே தங்கும்? எங்கே குடிகொள்ளும்? தேவனுடைய வசனத்தை யார் கைக்கொள்ளுகிறார்களோ அவர்களிடத்தில் தேவனுடைய அன்பு மெய்யாகவே பூரணப்பட்டிருக்கும் என்று கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது. அப்படிப்பூரணப்பட்டிருப்பவர்கள் அவருக்குள் அதாவது கர்த்தருக்குள் இருக்கிறார்கள் என்பதை அதினாலே அறிந்துகொள்ளலாம். இதினாலே தேவனுடைய பிள்ளைகளை நாம் அடையாளம் கண்டுகொள்ளலாம். தேவசமுகத்திலிருந்து கிடைக்கும் இந்த விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் பெற்றுக்கொண்டு உண்மையுள்ள கிறிஸ்தவர்களாயிருக்கபிரயாசப்படுங்கள். அப்பொழுது எல்லாபுத்திக்கும் மேலான சமாதானம் உங்களை ஆண்டுகொள்ளும். இந்த மூன்றையும் பெற்றுக்கொண்டு தேவனை அறிகிற அறிவிலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலும் வளர்சியடையுங்கள்.

உண்மைக்கு எதிராக பொய் இருப்பதைப்போல பிசாசு மூன்று காரியங்களை உலகத்தில் விதைத்து வைத்திருக்கிறான். அவைகள் என்னவென்றால்; "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" (1யோவா.2:16). அவைகளில் ஒன்று **மாம்சத்தின் இச்சை.** இந்த மாம்சத்தின் இச்சைக்கு அடிபணிந்தவர்கள் தேவனுடைய கட்டளைகளை தள்ளிவிட்டு, பிசாசின் உபதேசங்களுக்குச் செவிகொடுத்து வீழ்ந்துபோகிறார்கள். மாம்சத்தின் இச்சை மனதை மயக்கக்கூடியதாக இருக்கிறது. இதில் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட அநேகர் வீழ்ந்துபோய் பாவத்தினால் பிடிபட்டார்கள் என பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். சத்தியத்திற்கு எதிராக இருக்கக்கூடிய இந்த மாம்சத்தின் இச்சைக்கு அநேகர் பலியாகிறார்கள். இதைக்குறித்து சிந்திக்கிறவர்கள் குறைவாகவே இருக்கிறார்கள். மாம்ச இச்சை என்று சொல்லும்போது மாம்சத்தை அதிகமாக இச்சித்து சாப்பிடுவது அல்ல. மாம்சத்தின் கிரியைகளைக் குறித்து நாம் படிக்கிறோம்; "அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச்





## பார்வையினால் அல்ல
## Not By Sight

நான் வழியை அறியவில்லை, அன்பின் கர்த்தாவே,
நீர் என்னை அழைத்துச் சென்றிருப்பீரென;
இரவில் ஒரு விளக்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கவில்லை
பாதை காட்டும் அடையாளக்குறியும் இல்லை.

வார்த்தைகளுக்காய் கதறுகிறான் மாம்சமானவன்
தள்ளாடும் பாதங்களை வழிநடத்த;
அவன் அஞ்சுகிறான் ஆழத்தின் அபாயங்களுக்கு,
கவலை, கண்ணீர், தோல்வி.

நடுங்கியகுரலில் உள்ளான மனிதன்
தொடர்ந்து வேண்டுகிறான் கேட்கப்படும்படி;
அவன் வாக்குத்தத்தை அறிகிறான் நீர்
மனிதனுக்காக உண்டாக்கியதை,
அது உம்முடைய வார்த்தையின் வாக்குத்தத்தமே.

அவன் முயற்சிக்கிறான் - ஓ கர்த்தாவே, அவன் முயற்சிக்கிறான்
விசுவாசத்தில் நடக்க எனக்குதவும்படி,
நடக்க வேண்டிய வழியைக் கண்டிப்பாக நான் கற்றுக்கொள்ள எனக்குச் சொல்லும்படி
நான் வழியை அறியாதிருக்கிற போதும்.

மேலும் உள்ளான மனிதனை சூழ்ந்துகொள்ள,
உம்முடைய கண்களையே நோக்கியிருக்கக் கற்றுக்கொள்ள எனக்குதவ,
உம்முடைய வழி நடத்தும் கரத்திற்குக் காத்திருக்க.
உமது அதிகமான பலத்தைக் கேட்கிறேன் கர்த்தாவே நான்

நான் வெளிச்சத்தைக் காண்பேன், நான் வழியை அறிந்து கொள்வேன்
ஒவ்வொரு அடிச்சுவடும் வெளிப்பட்டிருக்கையில்;
தயைசெய்து கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள எனக்குதவும் கர்த்தாவே,
தயைசெய்து தள்ளாடும் என் ஆத்துமாவை வழிநடத்தும்.

*- Betty*

## பொது அறிவுச் சோதனை



1. இந்தியாவில் ரேடியோ ஒலிபரப்பு தொடங்கப்பட்ட ஆண்டு எது?
   அ)1926 ஆ)1925 இ)1927
2. கண்ணின் மீச்சிறு தொலை தூரம் எவ்வளவு?
   அ)0.50 செ.மீ ஆ)0.20 செ.மீ இ)0.25 செ.மீ
3. அக்குபஞ்சர் முறையைக் கண்டு பிடித்த நாடு எது?
   அ)சீனா ஆ)இந்தியா இ)ஜப்பான்
4. போலியோ நோயை தடுக்கும் வழிமுறையை கண்டறிந்தவர் யார்?
   அ)ஜோன்ஸ் சாக் ஆ)எட்வின் ஹபின் இ)ராபர்ட் மிலிகன்
5. இந்தியாவில் ஆங்கிலேயர்களால் நிர்மானிக்கப்பட்ட முதல் துறைமுகம் எது?
   அ)சூரத் ஆ)கொல்கத்தா இ)மும்பை

**விடைகள்:** 1.1927 2.0.20 செ.மீ 3.சீனா 4.ஜோன்ஸ் சாக் 5.சூரத்

- கீழ்ப்படியாத பிள்ளைகளோடு நாம் நடந்தோம்
- நாம் இச்சைகளை கொண்டவர்களாயிருந்தோம் இன்னும்கூட இன்றுவரை நேர்மையற்றவர்களாயிருக்கிறோம்.

ஆனபடியினால் தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே அன்புடையவராயிருக்கிறார்.

நாம் நம்முடைய பாவங்களில் தொடர்ந்து இருந்தபோதிலும்கூட அப்படியிருந்தார் என்பதை **நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.**

கிறிஸ்துவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.

**நினையுங்கள்:** ஏனென்றால் தேவன் நமக்கு அருளின ஈவினால் மட்டுமே நாம் இரட்சிக்கப்பட்டோம்.

ஆகவே இதை கவனித்துக் கேட்கிறவர்களை கண்டறிந்து அவர்களனைவருக்கும் இந்த ஈவை கொண்டு செல்ல நாமும் கூட கடனாளிகளாயிருக்கிறோம்.

**வாசகர் கடிதம்**

*கர்த்தரின் பணிசெய்யும் அய்யா அவர்களுக்கு தோத்திரம். அய்யா "திவேர்ட் ஆப் கிரைஸ்ட்" ஜூன் 2016 இதழ் 14.06.2016 முதன் முதலாக (புதிதாய்) கிடைக்கப்பெற்றேன். நன்றி அய்யா, எனது முகவரி தங்களுக்கு எப்படி கிடைத்தது? நான் வேதத்தின் மறைபொருளான சத்தியங்களை அறிந்து (தெரிந்து) கொள்ள மிக ஆர்வம் உள்ளவன். தொடர்ந்து இதழ் அனுப்புங்கள். விடைகளை அனுப்பியுள்ளேன்.*

E. அதிசயம், பனைகுடி

*இயேசுவின் இனிய நாமத்தில் உயர்திரு ஆசிரியர் B.அர்ஜூனன் அவர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!*

*தங்களுடைய ஊழியம் புறஜாதிகளின் மத்தியிலும் சென்று அவர்களை இயேசுவுக்குள்ளாக வரும்படி உள்ளது. அது தங்களுக்குக் கிடைத்த சிலாக்கியம்.*

K.S. மாணிக்கவாசகம், திருச்சி

## நடப்புச் செய்திகள்

- மும்பையைச் சேர்ந்த எட்டாம் வகுப்பு மட்டுமே படித்த மாளவிகா என்பவருக்கு அவரது கம்யூட்டர் அறிவால், எம்.ஐ.டி. எனப்படும் அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் தொழில் நுட்ப நிறுவனத்தில் படிக்கும் வாய்ப்பு.
- எவரெஸ்டில் ஏறியதாக பொய் கூறிய இந்திய தம்பதிக்கு நேபாள அரசு தடை.
- உலகின் பெரு நகரங்களில் ஒன்றான குஜராத் பண்டைய காலத்தில் 3,450 ஆண்டுகளுக்கு முன் சுனாமியால் அழிந்திருக்கும் என தொல்லியல் துறை ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வாருங்கள் தேவனை ஆராதிப்போம்**




**கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்**
**38,மேயர் சிட்டிபாபு தெரு,**
**எல்லிஸ்ரோடு(மவுன்ட்ரோடு சமீபம்)**
**திருவல்லிக்கேணி**
**சென்னை -600 005**
**தொடர்புக்கு:**
**சகோ.தாமஸ்**
**9884047398**



சொல்லுகிறேன்" (கலா.5:19-21). இவைகள் மாம்சத்தின் கிரியைகளாக இருக்கிறது. இவைகளில் ஒன்று இருந்தாலும் அவன் ஆவிக்குரியவன் அல்ல மாம்சத்தின் இச்சைக்கு கீழ்ப்படிந்தவன். பிசாசு அவனை ஆண்டுகொள்ளுவான். அவனுடைய முடிவு மரணம் என்று காண்கிறோம். பிசாசு கொடுக்கும் ஒவ்வொன்றும் முடிவில் மரணத்தைக் கொண்டுவரும். அவனுடைய முடிவும் அழிவாகவே இருக்கிறது. அவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்துநிற்கிறான். தேவனுடைய பிள்ளைகள் மத்தியில் களைகளை விதைத்து குழப்பத்திற்குள்ளாக கொண்டுசெல்லுகிறான்.

**இரண்டாவது கண்களின் இச்சை.** கண்களை தேவன் நலமான காரியத்திற்காக மனிதனுக்கு உண்டாக்கினார். ஒருவனுக்கு கண்ஒளி இல்லையென்றால் அவனால் ஒன்றையும் பார்க்கமுடியாது. கண் சரீரத்தின் விளக்காக இருக்கிறது. இவைகளை கர்த்தர் மனிதனுக்கு உண்டுபண்ணினார். இந்த கண்களை நலமான காரியங்களுக்கு பயன்படுத்தும்போது நலமானவைகளைப் பெற்றுக்கொள்வோம். ஆனால் பிசாசு கண்களின் இச்சையை தூண்டும் சில காட்சிகளை கண்களுக்கு முன்பாக வைக்கிறான் இதினாலே அநேகர் கண்களின் இச்சைக்கு அடிபணிந்துவிடுகிறார்கள். இதில் நம்முடைய ஆதி தாய் ஏவாள் முதலாவது வீழ்ந்தாள் என காண்கிறோம். "அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்" (ஆதி.3:6). ஏவாள் தேவனால் விலக்கப்பட்ட கனி பார்வைக்கு இன்பமாயிருக்கிறது என்று கண்டாள். இன்றைக்கு அநேக தேவனுடைய பிள்ளைகள் விழ்ந்துபோவது கண்களின் இச்சையினால்தான். அது நன்றாக இருக்கிறது, இது நன்றாக இருக்கிறது என்று அங்கும் இங்கும் பார்த்து அநேகர் கெட்டுப்போகிறார்கள். அவைகளை பார்க்குமுன் தேவன் நமக்கு கொடுக்கும் எச்சரிப்பை பார்ப்போமானால் நாம் பிசாசு விதைத்து வைத்திருக்கும் காரியங்களை தேவன் நமக்கு கொடுத்திருக்கும் ஆவிக்குரிய கண்களினால் அறிந்துகொள்ளலாம். அவைகளை பார்க்கக்கூடாது என்று சிலருடைய கண்களை பிசாசு குருடாக்கி வைத்திருக்கிறான். அப்படிப்பட்டவர்களிடம் நாம் மிகவும் சாந்தமாக உபதேசிக்க வேண்டியவாகளாக இருக்கிறோம். பிசாசு கொடுக்கும் இந்த கண்களின் இச்சையின் முடிவு என்ன? இதனுடைய முடிவு அழிவு. தேவன் உண்டாக்கின ஒவ்வொன்றும் குற்றமற்றதாக இருக்கும்படி காக்கப்படவேண்டும். ஆத்துமாவில் சரியாயிருந்தால் போதும் என்ற போதனை ஜனங்கள் மத்தியில் இருக்கிறது. ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

**மூன்றாவது ஜீவனத்தின் பெருமை.** இந்த பெருமை பிசாசினால் உலகத்தில் விதைக்கப்பட்டிருக்கிறது. பிசாசு பெருமையுள்ளவன். ஆகையால் ஆண்டவர் இயேசுவைப் பார்த்து என்னைப் பணிந்துகொள் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்றான். அப்பாலே போ சாத்தானே என்று சொல்லி அவனை ஜெயித்தார். இப்படி இயேசுவைப்போல பிசாசை ஜெயிக்க முடியாமல். அவன் கொண்டுவரும் பெருமைக்கு அநேகர் அடிபணிந்துவிடுகின்றனர். "பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (1பேது.5:5). பெருமையுள்ள எந்த மனிதனுக்கும் முதல் எதிராளியாக இருப்பவர் கர்த்தர். மனிதன் பெருமைப்படுவதற்கு என்ன இருக்கிறது? ஒரு மனிதன் ஒருபெரிய கோபுரத்தைக் கட்டுகிறான். அவன்தான் இந்த கோபுரத்தை கட்டியவன் என்று, அவனை பெருமையாக ஜனங்கள் பேசுவார்கள். நான் கேட்கிறோன் அவன் அந்த கோபுரத்தை கட்டுவதற்கு பொருட்களை எங்கே சேகரித்தான்.

இந்த பூமியிலிருந்துதானே சேகரித்தான். இல்லாதவைகளிலிருந்த அவன் சேகரித்தானா? இல்லையே ஏற்கனவே தேவனால் உண்டாக்கப்பட்ட பொருட்களிலிருந்து ஒரு கோபுரத்தை வடிவமைத்து இருக்கிறான். அவ்வளவு தான். அவன் ஒன்றும் பெரியவன் அல்ல. பெருமைக்குரியவனும் அல்ல. எல்லா புகழும் தேவன் ஒருவருக்கே சேரவேண்டும். நாம் மண்ணாயிருக்கிறோம் என்பதை நினைவுகூரவேண்டும். மண்ணாகிய நாம் தேவனுடைய பார்வையில் நீதிமான்கள் அல்ல. தேவனே நம்மை பரிசுத்தப்படுத்த வல்லவர். பெருமைக்குரிய பிசாசு உலகத்தில் விழத்தள்ளப்பட்டான். அவனுடைய பெருமை அவனை விட்டு அகலவில்லை. அவன் ஜீவனத்தின் பெருமையை ஜனங்கள் மத்தியில் வைத்து அவர்களை தம்மைப்போல மாற்றுகிறான். இதனுடைய முடிவு அழிவு.

தேவன் கொடுக்கின்ற விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நம்மை நித்தியத்திற்கு வழிநடத்தும் ஆயுதங்களாக நமக்கு இப்பூமியில் உதவும். இவைகளை ஒரு மனிதன் பெற்றுக்கொள்ளும்போது எல்லையில்லா ஆசீர்வாதங்களை பெற்று முடிவில், நித்திய வாழ்க்கையில் தேவனோடிருப்பான். பிசாசு கொடுக்கும் மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை இவைகளை ஒருமனிதன் பெற்றுக்கொள்ளும்போது அவனுடைய வாழ்வில் அசுத்தம் குடிகொள்ளும். முடிவில் நித்திய அழிவை அடைவான். அங்கே அக்கினி அவியாமலும் புழு சாவாமலும் இருக்கும். அந்த இடத்தில் பங்கடைவான். இன்றே தீர்மானம் செய்யுங்கள். தேவன் கொடுக்கும் மூன்றை பெற்றுக்கொண்டு நித்தியத்தில் தேவனோடு வாழப்போகிறீர்களா? அல்லது பிசாசு கொடுக்கும் மூன்றை பெற்றுக்கொண்டு நித்திய நரகத்தில் பிசாசுடன் அழியப்போகிறீர்களா? இவைகளைத் தெரிந்துகொள்வது உங்களுடைய கரத்திலுள்ளது.

**உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோகுமா?**

ஆம், "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1யோவா.2:17). உலகத்தில் உண்டான இச்சைகள் பிசாசினால் கொண்டு வரப்பட்டவைகள் அவைகள் ஒழிந்துபோம். ஆனால் இந்த உலகத்தில் பிசாசினால் விதைக்கப்பட்ட இவைகளை ஏற்றுக் கொள்ளாது தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்கள் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போலிருப்பார்கள். அன்பானவர்களே, உலகத்தில் உள்ளளவும், பிசாசு கொண்டுவரும் இச்சைகளுக்கு அடிபணியாது உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் ஒழிந்துபோகாத ஆண்டவருடைய வசனங்களுக்கு செவிகொடுத்து வாழ்நாளெல்லாம் ஜீவனுள்ள தேவனைப் பற்றிக்கொண்டு, ஜீவனுள்ள வார்த்தையின்படி ஜீவிக்க பிரயாசப்படுங்கள். விசுவாசத்தையும் நம்பிக்கையையும் அன்பையும் உங்களுடைய ஆயுதமாக தரித்துகொள்ளுங்கள். கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்கிறோம்.


**நம்பிக்கை TV சேனலில்**
**ஒவ்வொரு வாரமும்**
**திங்கள் மற்றும்**
**சனிக்கிழமைகளில்**
**மாலை 7.30 மணி முதல்**
**'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course**
படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




பெண்கள் பகுதி

## இழந்து போன ஆத்துமாவுக்காக நாம் எவ்வாறு பேரார்வத்தைப் பெருகப்பண்ண முடியும்?
## - How can we develop passion for the lost?

*-Paula Bates*



**- சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

**இழந்து போனவர்களுக்காக பேரார்வம்**

**அப்.19:5** அடுத்த அதிகாரத்தில் பவுல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி போதித்தான்

**எபி.12:25** பழைய ஏற்பாட்டில் பூமியிலே பேசப்பட்டவற்றிற்கு ஜனங்கள் பயமிக்கவர்களாயிருந்தார்கள்

நாம் மிகப்பெரிய உந்துதலைப் பெற்றிருக்கவேண்டும் ஏனென்றால் இயேசு இப்பூமிக்கு வந்து இப்பொழுது பிதாவாகிய தேவனோடுகூட பரலோகத்தில் வீற்றிருக்கிறார்.

**வச.28** அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம்.

**ஏன்? வச.29** நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே.

**எபி. 10:29** தொடர்ந்து தேவனுடைய குமாரனை அசட்டைப் பண்ணி தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவனாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்.

**வச.30** கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்.

**வச.31** ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே

**வச.38** விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் - ஆனால் சிலர் பின்வாங்கிப்போகிறார்கள்

**வச.39** நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல் ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்.

**எனக்குத் தெரியாதவர்களுக்காக நான் ஏன் கஷ்டப்படவேண்டும்?**

**ரோமர் 1:14** பவுல் ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவர்களிடம், "கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன்" என்றார் அவர் தான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க தயாராக இருப்பதாகவும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து தான் வெட்கப்படவில்லை என்றும், முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது என்றும் பகிரங்கமாக அறிவிக்கிறான்

**எபேசியர் 2:1-4**

- அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் நாம் மரித்தவர்களாயிருந்தோம் என்பதை நினைவுகூருங்கள்.

மனதில்லாதிருக்கிறார்கள். தாங்கள் மாத்திரமல்ல தங்கள் குடும்பத்தாரையும் சத்தியத்தை அறிந்து கீழ்ப்படிய அனுமதிக்கிறதில்லை. அநேகக் குடும்பங்களில் ஸ்திரீகளுடைய ஆளுகை தான் காணப்படுகிறது. தங்களுடைய புருஷர்களின் விசுவாசத்திற்குக் கூட தடையாயிருப்பவர்களும் உண்டு. யோவுவின் மனைவியுங்கூட தன் புருஷனுடைய விசுவாசத்தைக் குறித்து அற்பமாய் எண்ணி, 'தேவனை தூஷித்து ஜீவனை விடு என்றாள்'. இப்பேர்பட்டவர்களைக் குறித்து, "..நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள்" (லூக்.11:32) என்று வேதம் கூறுகிறது.

சகோதரியே, அன்று எலிசா தீர்க்கதரிசியின் காலத்தில் இஸ்ரவேலில் அநேக குஷ்டரோகிகள் இருந்தார்கள். ஆயினும் சீரியதேசத்தானாகிய நாகமானே அல்லாமல் வேறொருவனும் சுத்தமாக்கப்பட வில்லை (லூக்.4:27). அப்படியானால் தேவனுடைய சொந்த ஜனமாகிய இஸ்ரவேலில் இருந்த குஷ்டரோகிகள் கூட சுகமாக்கப்படவில்லை என்று தானே பொருள். ஆனால் புறதேசத்தானாகிய நாகமானுக்கு சுகம் கிடைத்தது. ஆம், நான் கிறிஸ்தவள், நான் பக்தியுள்ளவள், பல ஆண்டுகளாக சபையில் அங்கம் வகிக்கிறவள், சிறுவர்பள்ளி நடத்தி வருகிறவள், அவ்வப்போது ஊழியம் செய்து கொண்டு வருகிறவள் என்று சொல்லி சத்தியத்தின்படி நடவாமல் உங்களுக்குள்ளே திருப்தியடைந்து வருகிறீர்களா? ஏமாந்து போகாதீர்கள். இம்மைக்குரிய ஆசீர்வாதங்களையே எதிர்நோக்கி, அதை அவ்வப்போது பெற்று அனுபவிப்பதனால் நாம் தேவனுடைய ராஜ்யத்திற்குட்பட்ட வர்கள் என்று ஆகாது.

சத்தியத்தை பகுத்துப் படியுங்கள். வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, பூமிக்குரியவைகளையல்ல நித்தியத்திற்குரியவைகளைக் கண்டு கொள்ளுங்கள். அன்று நாகமானுக்குக் கிடைத்த நற்செய்தி இதைவாசிக்கும் உனக்கு இன்று கிடைத்துள்ளது. இழந்து போன ஆவிக்குரிய ஆசீர்வாதங் களையும், என்றென்றும் அவரோடு கூட உறவாடிக் கொண்டிருக்கும் ஆசீர்வாதங்களையும் மீண்டும் பெற இயேசுவினிடத்திற்கு வா. கிறிஸ்தவரல்லாத உனக்கு இயேசு தேவை, கிறிஸ்தவர்கள் என்று வெறுமனே எண்ணிக்கொண்டிருக்கிற உனக்கும் இயேசு தேவை. இன்றே இயேசுவை அறிய வேண்டிய பிரகாரம் அறிந்து, அவரை விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவே தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்வீர்கள். சத்திய ஆவியானவர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்திச் செல்வார். நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தைப் பெறுவீர். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கேற்றவைகளைக் குறித்தும் அறிய விரும்புகிற உங்களுக்கு உதவிசெய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறோம். தேவன் தாமே உங்களை வழி நடத்துவாராக!

**தினமும் காலை எழுந்தவுடன் முதலாவது முழங்கால்படியிட்டு**
**ஜெபியுங்கள் பின்பு யாரைப் பார்க்கிறீர்களோ**
**அவர்களுக்கு ஸ்தோத்திரம் சொல்லுங்கள்**



**சந்தோஷம் என்பது**
ஒரு ஆரோக்கியமான மனநிலை,
ஒரு நன்றியுள்ள குணம்,
ஒரு தெளிவான மனசாட்சி,
ஒரு அன்பு நிறைந்த இருதயம்.





Contact: 94435 58041

**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**

ஜெபியுங்கள்

- சென்ற மாத ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக...
- வேல்டு இவான்சலிசம் வேதாகம பள்ளியின் முதலாவதாக பட்டம் பெற்றவர்களுக்காக...
- இம்மாத ஊழியங்களுக்காக...
- இலவச மருத்துவ ஊழியங்களுக்காக...
- புதிய வாசகர்களுக்காக...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**இயேசு சொல்கிறார்:**
"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041

தெரிந்து கொள்வோம்

## உங்களுக்குத் தெரியுமா?

K.R.K.Ravi Asir, Associate Editor

- உலகிலேயே பரப்பளவில் மிகச் சிறிய நாடு வத்திகான்.
- உலகிலேயே பரப்பளவில் மிகப் பெரிய நாடு ரஷ்யா
- உலகிலேயே மிகப் பெரிய தீவு கிரீன்லாந்து
- உலகிலேயே மிக உயர்ந்த பீட பூமி தீபெத் பீட பூமி
- உலகிலேயே மிக உயரத்தில் அமைந்துள்ள நாடு சுவிட்சர்லாந்து
- உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் சஹாரா பாலைவனம் (ஆப்பிரிக்கா)
- உலகிலேயே மிகவும் வறண்ட பாலைவனம் அடகாமா பாலைவனம் (சிலி)
- உலகிலேயே மிக உயரமான நீர் வீழ்ச்சி ஏஞ்சல் நீர் வீழ்ச்சி (வெனிசுலா)
- உலகிலேயே மிக அகலமான நீர் வீழ்ச்சி நயாகரா நீர் வீழ்ச்சி
- உலகிலேயே மிக நீளமான நதி நைல்நதி (6695 கி.மீ)
- உலகிலேயே மிக உயரமான மலைச் சிகரம் எவரெஸ்ட் (நேபாளம் 8848மீ)
- உலகிலேயே மிகப் பெரிய வளைகுடா மெக்சிகோ வளைகுடா
- உலகிலேயே மிகப் பெரிய கண்டம் ஆசியாக் கண்டம்
- உலகில் நதிகளே இல்லாத நாடு சவுதி அரேபியா.

## கிறிஸ்து கல்லறையிலிருந்து எழுந்தருளினார் என நாம் ஏன் விசுவாசிக்கிறோம்?

## Why We Believe That Christ Arose From The Grave

*J.C.Choate*



இயேசு கிறிஸ்து ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தார் சிலுவையில் மரித்தார் என்ற உண்மையினை நாம் யாவரும் நிச்சயமாக அறிந்துள்ளோம். அதுவே அதன் முடிவானால் நீண்ட நாட்களுக்கு முன்பாகவே அவர் மறக்கடிக்கப் பட்டிருப்பார். ஆனால் அவர் இன்றும் இருதயங்களில் வாழ்கிறார், உலககெங்கிலுமுள்ள ஆயிரக் கணக்கான இன்னும் கோடிக்கணக்கான ஜனங்களின் இருதயங்களில் வாழ்கிறார். ஏன்? அவர் கொடூரமான சிலுவையின் மேல் ஆணியறையப்பட்டு, அடக்கம் பண்ணப்பட்டு மூன்று நாட்கள் கழித்து கல்லறையிலிருந்து எழுந்தருளினார் என்ற ஒரே காரணத்திற்காகவே! ஆனபடியினால் நாம் இன்றும் கூட கிறிஸ்து மரித்துப்போனது மட்டுமல்ல, ஆனால் அவர் மரணத்திலிருந்து உயிரோடெழுப்பப்பட்டார் எனவும் அறிவித்துக் கொண்டிருக்கிறோம். அதனாலேயே எபிரெய ஆசிரியரோடு கூட நாமும், “இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்” (எபி.13:8) என்று கூறமுடிகிறது.

கிறிஸ்து வாழ்ந்த காலத்திலுங்கூட அவர் தாமே மரணத்திலிருந்து உயிர்த்தெழுவேன் என வாக்களித்தார். அவர், “இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்”. அப்பொழுது யூதர்கள் அவர் எருசலேமிலிருந்த தேவாலயக் கட்டடத்தைக் குறித்துப் பேசுகிறார் என நினைத்து அவர்கள், “இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள். அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப் பேசினார்” (யோவா.2:19-21). மீண்டும் நாம், “அது முதல் இயேசு, தாம் எருசலேமுக்குப் போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பலபாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்” (மத்.16:21) என வாசிக்கிறோம். அந்த சமயம் சீஷர்கள் இந்தக் கூற்றினுடைய முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளவில்லை, ஆனால் அந்த நாள் நிறைவேறினபோது அவர்கள் தாமே கிறிஸ்து உயிர்த்தெழுந்த கர்த்தர் என்ற உண்மையினையும் அவர் அவர்களுக்குச் சொல்லியிருந்ததையும் நினைவுகூர்ந்து, அறிந்துகொண்டு அதைக்குறித்தும் சாட்சிபகர்ந்தனர்.

கிறிஸ்து அநீதியாகதீர்ப்பு செய்யப்பட்ட பிறகு, சிலுவையின் மேல் ஆணியறையப்பட்டு, மகா கொடிய வேதனையோடு மரணமடைந்தார், வேதம் “சாயங்காலமான போது, இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து, பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக்கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து; கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப்போனான்” (மத்28:57-60) என்று கூறுகிறது. இந்தக் குறிப்பில் இதுவே இயேசுவினுடைய முடிவு என்பது போல் தோற்றமளிக்கிறது. சீஷர்களும்கூட, இது ஏற்றுக் கொள்ளக் கூடியது போல் காணப்பட்டதாலும், அவர்கள் தங்களுடைய பழைய நிலைக்குத் திரும்பிச்செல்ல எண்ணங்கொள்ள ஆரம்பித்தார்கள். இவையெல்லாவற்றிற்கும் மாறாக இயேசு



மனுஷனுக்கு இருந்த குஷ்டரோகம் குணமாக ஒரு நற்செய்தி அறிவிக்கிறாள்”...... அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள். அவள் தன் நாச்சியாரைப் பார்த்து என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்” (2இராஜ.5:2,3).


அன்பு சகோதரியே, அவளுடைய எஜமாட்டி ஒரு வேலைக்காரியின் சொல்லைக் கேட்டு செயல்படுவதை இழிவாக அல்லது அற்பமாக எண்ணினாளா? அவ்வாறு எண்ணியிருப்பாளேயானால் நிச்சயம் தன் புருஷனுக்கு சுகத்தினைப் பெற்றிருக்கமாட்டாள். குஷ்டரோகம் என்ற அந்த வியாதி அன்றைய நாட்களில் தீட்டாக எண்ணப்பட்டு பெரிய வியாதியாகக் கருதப்பட்டது இன்றைய நாட்களில் ஜனங்களைப் பிடித்துள்ள மிகப்பெரிய வியாதி பாவம் என்ற வியாதி! ஆம், எவ்வாறு குஷ்டரோகம் அன்று அருவருக்கப்பட்டதோ, அதைக் காட்டிலும் மிக அருவருப்பான பாவவியாதி மக்களை பிடித்துக் கொண்டிருக்கிறது. ஒருவேளை வெளிப்படையாக நீ ஒரு பாவமும் செய்யவில்லையென்பாயாகில், இதோ, இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும் சில பாவங்கள் மனுஷனைத் தீட்டுப்படுத்துமே. “எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்சாட்சிகளும், தூஷணாங் களும் .......மனுஷனைத் தீட்டுப்படுத்தும்......” என்றார் (மத்.15:19) இயேசு கிறிஸ்து. இவைகளில் ஏதாவது உன்னிடத்தில் உண்டா? என்று சோதித்துப் பார். அன்று அந்த அடிமைப்பெண் தேவனுடைய தீர்க்கதரிசியினிடத்திற்கு நேராக தன் எஜமானை வழிநடத்தினாள். இதை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரியே, நான் தீர்க்கதரிசியிலும் பெரியவரும் மேன்மையுள்ளவருமாகிய இயேசுவினிடத்திற்கு நேராக உன்னை வழிநடத்துகிறேன். இயேசுவினுடைய இரத்தம் சகல பாவங் களையும் நீக்கிசுத்திகரிக்கும். உன்னை குணமாக்கும். சத்தியத்தை சத்தியமாய் போதிக்கும் போதகத்தையோ போதகரையோ அற்பமாய் எண்ணி இரட்சிப்பை இழந்து விடாதே. “மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்” (நீதி.1:7) என வேதம் கூறுகிறது. உலக ஞானத்தில் சிறந்து விளங்கும் ஒரு நபர் தெய்வஞானத்தை அசட்டை செய்யும் போது அவர்கள் தேவனுடைய பார்வையில் மூடரைப் போல்தான் இருக்கின்றனர். “ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்.....” (1கொரி.1:27). சில வேளைகளில் நமக்குள் இருக்கும் சிறப்பான அறிவுக்கேற்ற காரியங்களை எண்ணி பெருமிதம் கொள்ளும்போதும் உலகப் பொருட்களை நாடி தேவனைப் புறக்கணிக்கும் போதும் தேவன் அற்பமானவைகளைக் கொண்டு நமக்குப் போதிக்க முற்படுகிறார். அன்று பிலேயாம் என்ற தீர்க்கதரிசிக்கு அற்பமான கழுதையைக் கொண்டு போதித்தார். மேலும் அற்பமாக எண்ணப்படுகிற ஆகாயத்துப் பறவைகள், மற்றும் காட்டுப் புஷ்பங்கள் போன்றவைகளிடமிருந்தும் போதனையைப் பெற அவைகளைக் கவனித்துப் பாருங்கள் என்று இயேசு சொல்கிறார்.

கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளுகிற அநேக ஸ்திரீகளும் கூட தங்களுடைய பாரம்பரிய கட்டுகளால் கட்டப்பட்டு சத்தியத்தை அறிந்து கொள்ள

# அற்பமாய் எண்ணாதிருங்கள்
## Despise Not

*J.Glory Arjunan*

பெண்கள் பகுதி



இதை வாசிக்கும் அன்பு சகோதரியே, நீ தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கு ஏற்றவைகளைக் குறித்தும் அற்பமாய் எண்ணி, நவநாகரீக வாழ்வில் மோகங்கொண்டு உன் நாட்களைக் கழிக்கின்றாயா? இன்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிருக்குமானால் நீ எங்கே செல்லுவாய்? அற்மாக எண்ணி ஒதுக்கப்பட வேண்டிய இவ்வுலக வாழ்வை மேன்மையாக எண்ணி மேன்மையான இரட்சிப்பைக் குறித்து அற்பமாக எண்ணிக்கொண்டிருப்பாயானால் உன் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியதாக மாறிவிடும்.

அன்று, நமது ஆதித்தாயாகிய ஏவாள் பாவஞ்செய்து தேவனுடைய மகிமையை இழந்தாள். அதனிமித்தம் நாமெல் லோரும் தேவ மகிமையை இழந்தோம். இழந்துபோன மகிமையை தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட அனைவருக்கும் கொடுக்கவே இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். 'பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.......'' (1தீமோ.1:15) என்றும், ''எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்ற வர்களாகி,'' (ரோம.3:23) என்றும் பரிசுத்த வேதம் கூறுகிறது. ஆனால் இன்று அநேக சகோதரிகள் நான் ஒரு பாவமும் செய்யவில்லை, என் பிள்ளைகளும், என் குடும்பம் முழுவதும் ஒரு பாவமும் செய்யவில்லை. தானதர்மங்கள் ஏராளமாய் செய்கிறோம், மற்றவர்களுக்கு எந்ததீங்கும் செய்யாது வாழ்கிறோம் கடவுளுடைய ஆசீர்வாதத்தினால் எந்த குறைவுமின்றி வாழ்கிறோம். இப்படியிருக்க நாங்கள் எவ்வாறு பாவிகள் ஆவோம், எங்களுக்கு இயேவின் இரட்சிப்பு எதற்கு? என்கின்றனர். அதுமாத்திரமல்ல, வேத வசனங்களை விளக்கிக் கூற முற்படும் போது அதை அசட்டை செய்து அற்பமாய் எண்ணவும் செய்கின்றனர்.

அன்பு சகோதரியே, நீயும் இவ்வாறு தான் எண்ணுகிறாயா? உலக சம்பத்துக்களை குறைவில்லாமல் பெற்று மேன்மைபாராட்டிக் கொண்டு வாழும் ஜனங்களை நோக்கி, ''உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவை களையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்து கொண்டார்'' (1கொரி.1:28) என்று வேதம் கூறுகிறது. ஆம், தேவன், இழிவாகவும் அற்பமாகவும் எண்ணப்பட்டவர்கள் மூலமாய் தம்முடைய குமாரனின் ராஜ்யத்திற்குள் அநேகரை கொண்டுவந்து சேர்த்துக் கொண்டேயிருக்கிறார்.

அன்று, தேவன் இஸ்ரவேல் தேசத்திலிருந்து சிறைபிடித்து கொண்டு செல்லப்பட்ட ஒரு சிறுபெண்ணின் மூலம் ராஜாவின் படைத்தலைவனும், அதிக எண்ணிக்கையுள்ள மக்கள் செல்வாக்கினைக் கொண்டிருந்த ஒரு பெரிய மனுஷனு மாயிருந்த நாகமான் என்பவனுக்கு நற்செய்தியை அனுப்பினார். அந்த சிறுபெண் சீரியா தேசத்தில் இவனுடைய வீட்டில் வேலை செய்து வந்த ஒரு பணிவிடைக்காரி, அதாவது ஒரு வேலைக்காரி. அற்பமாய் எண்ணப்பட வேண்டிய இவள் தன் எஜமானாகிய இந்த



கல்லறையிலிருந்து திரும்பவும் உயிர்த்தெழுந்து வருவேன் என்று கூறியதைப் பற்றி இயேசுவின் பகைஞர்கள் மறந்துபோகவில்லை. ஆனபடியினால் ''ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் வந்து; ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும் போது, மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப் பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப் பார்க்கிலும் பிந்தின எத்து கொடியதாகாதபடிக்கும், நீர் மூன்று நாள்வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிடவேண்டும் என்றார்கள். அதற்குப் பிலாத்து: உங்களுக்குக் காவல்சேவர் உண்டே; போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள் என்றான். அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல்வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்'' (மத்.27:62-66) என்று வாசிக்கிறோம்.

தயவுசெய்து தொடந்து கவனியுங்கள், கிறிஸ்து உண்மையாகவே கல்லறை யிலிருந்து எழுந்திருப்பாரென்று அவர்கள் நம்பவில்லை, ஆனால் சீஷர்கள் வந்து அவரை களவாடிக் கொண்டு போய்விடுவார்கள் என்று அவர்கள் பயந்தார்கள், மேலும் அதன் விளைவாக இயேசுவினுடைய புகழ் முன்பைக் காட்டிலும் இன்னும் அதிகமாகப் பரவிவிடும் என்றும் பயந்தார்கள். இது நடைபெறவில்லையென உறுதிசெய்யும் படிக்கும், கல்லறை ஒழுங்காக முத்திரை போடப்பட்டுள்ளதை உறுதிசெய்யும்படிக்கும் அவர்கள் கல்லறைக்குச் சென்றார்கள், அதன் பிறகு அங்கே இரண்டு பேரை காவல்காக்கும்படி விட்டுச் சென்றார்கள்.

இப்பொழுது நாம் தொடர்ந்து வாசிப்போம் இது, ''ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்துவருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னல்போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள், தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச் சொன்னேன் என்றான். அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள். அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப் போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்து கொண்டார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார்'' (மத்.28:1-10) என்கிறது. இப்போது இது சீஷர்கள் ஏற்கனவே இயேசுவின் சரீரத்தைக் களவாடிப் போகும்படி திட்டமிட்டிருந் தார்கள் என்பதான அவர்களுடைய கருத்தை ஊர்ஜிதப்படுத்தவில்லை. இன்னும் சரியாகக் கூறினால், அவர்கள் காவல்சேவகர்கள் பிரமித்ததுபோல் பிரமித்தார்கள் என்பதை இது வெளிப்படுத்துகிறது. ஆரம்பத்தில் சில சீஷர்கள் கூட சந்தேகப்பட்டார்கள். துவக்கத்தில் அப்போஸ்தலர்களில் சிலரும் கூட சந்தேகித்தனர்.

தொடந்து வாசிக்கையில் மாறுபட்ட கருத்துள்ள காவலாளர் உயிர்த்தெழுந்த இக்காட்சியினை எவ்விதம் சமாளித்தனர் என்பதைக் காணலாம். நாம், “அவர்கள் போகையில், காவல்சேவகரில் சிலர் நகரத்துக்குள்ளே வந்து, நடந்த யாவற்றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள். இவர்கள் மூப்பரோடே கூடவந்து, ஆலோசனை பண்ணி, சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து; நாங்கள் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லுங்கள், இது தேசாதிபதிக்குக் கேள்வியானால், நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி, உங்களைத் தப்புவிப்போம் என்றார்கள். அவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு, தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள். இந்தப் பேச்சு யூதருக்குள்ளே இந்நாள் வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது” (மத்28:11-15) எனச் சொல்லப்படுகிறது. இப்போது இங்கே என்ன நடந்தது என்பதைப் பற்றி சிந்தியுங்கள். நாம் முன்னால் சொன்ன வசனங்களை வாசிக்கையில், கல்லறையைக் காவல் காக்கும்படி சென்றவர்கள் அங்கே என்ன சம்பவித்தது என்பதுபற்றி மிகவும் நன்றாக அறிந்திருந்தார்கள். தூதன் கல்லைப் புரட்டிப் போடும்படி தோன்றிய போது, அவர்கள் மிகவும் பயமடைந்தார்கள், அவர்கள் நடுங்கினார்கள், அவர்கள் செத்தவர்களைப் போலானார்கள். பின்பு இவையனைத்திற்கும் பிறகு, அவர்கள் சம்பவித்தது என்ன என்பதைப்பற்றி பிரதான ஆசாரியனுக்குச் சொல்லும்படி நகரத்திற்குள் பிரவேசித்தார்கள். இதற்கும் மேலாக நேர்மையாயிருக்கவும், இயேசு மெய்யாகவே கல்லறையை விட்டு உயிர்த்தெழுந்தார் என்பதை ஒத்துக்கொள்ளவும், மூப்பர்களோடு கூடி, இதைக் குறித்து விவாதித்து அதன் பின் அந்த மனிதருக்கு மிகப்பெரும் தொகையாக பணம் கொடுக்கப்பட்டு, அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது கிறிஸ்துவினுடைய சீஷர்கள் வந்து களவாடிச் சென்று விட்டார்கள் என எங்கும் சொல்லும்படி அறிவுறுத்தப் பட்டார்கள் இந்தச் செயல் அவர்கள் பொய்சொல்லும்படிக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டார்கள் என பொருள்படுகிறது. அது மெய்யாகவே சம்பவித்திராதிருந்திருக்குமானால் அவர்களுக்கு பணம் கொடுக்க வேண்டிய அவசியமிருந்திருக்காது மேலும் அந்தக் காவலாளிகள் பொய் சொல்லியிருந்திருக்கவுமாட் டார்கள். ஆனாலும், காவல்சேவகர் தூங்கிக் கொண்டிருந்த போது கிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய சரீரத்தைக் களவாடிச் செல்ல இடம் கொடுப்பது அவர்களுக்கு எவ்வாறு பொருத்தமுடையதாயிருக்கும்? இதுபோன்ற காரியங்களில், காவல்சேவகர் தங்கள் பணிகளில் தூங்கிய குற்றத்திற்காக தங்களுடைய ஜீவனையே இழந்திருக்க வேண்டும். கண்டிப்பாக, மூப்பர்கள், கவர்னருடைய காதுகளுக்கு இவ்விஷயம் சென்று விடும் அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ளும்படி கவர்னருக்கு இதுகுறித்து விளக்கமளிக்க வேண்டுமென இந்த மனிதரை பயமுறுத்தினார்கள்.

இது விந்தையாகயிருக்கலாம், ஆனால் இன்றும்கூட இயேசு உண்மையாகவே சிலுவையில் மரிக்கவில்லை என்றும் ஆனபடியினால், கல்லறையிலிருக்கையில், இரவிலே அவர் காணாமற்போய் விட்டார் அல்லது அவருடைய சீஷர்கள் களவாடி போய்விட்டார்கள் என்றும் கூறுகிறவர்கள் உண்டு. அது அபத்தமானது. கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற உண்மையினை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் அத்தோடு வேதாகமம் முழுவதும் நிரூபிக்கிறது. அது மாத்திரமல்ல, இரட்சிப்பு, ஞானஸ்நானம், சபை, கர்த்தருடைய பந்தி, மேலும் கிறிஸ்தவம் பொதுவாக எல்லாம் அதனதன் நிலைத்தன்மையும் சிறப்பும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. பரிசுத்த வேதம் மாற்றமடைந்துள்ளது ஆகவேதான் இவைகளை எல்லாம் இது போதிக்கிறது என்று கூறுகிறவர்கள் உண்டு. ஆனால் இதை யார் மாற்றியிருக்கிறார்கள்? யூதர்களல்ல, ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவை



“அவன் எழுந்து இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக் கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போய், ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான். எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று தீர்க்கதரிசியின் மூலமாய்க் காத்தரால் உரக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது” (மத்.2:14,15).

இது ஓசியா 11:1-ல் முன்னுரைக்கப்பட்டிருந்தது. யூதா, புறஜாதியார் ஆகிய இருவரும் தேவனுடைய குமாரன் ஆனவர் தக்க வயதை அடைந்த பொழுது அவரை கொன்று போடும்படி செய்த சதித்திட்டத்தை சங்.2 சொல்கிறது. இயேசுவானவர் செய்த பல அற்புதங்கள் இயேசுவின் தெய்வீகத் தன்மையை நிரூபித்தபோதிலும், அவர்கள் இயேசுவை புறக்கணித்ததற்கான குறிப்பு பல வசனங்களில் காணப்பட்டாலும், அவர்கள் அவர் மேல் கொண்டிருந்த பகைமைக்கான தெளிவான ஒரு விளக்கத்தை யோவான் 11:47-53 வசனங்கள் கொண்டிருக்கின்றன.

“அப்பொழுது பிரதான ஆசாரியரும் பரிசேயரும் ஆலோசனைச் சங்கத்தைக் கூடிவரச் செய்து, நாம் என்ன செய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே. நாம் இவனை இப்படி விட்டு விட்டால், எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப் போடுவார்களே என்றார்கள்.

“அப்பொழுது அவர்களில் ஒருவனும் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனுமாகிய காய்பா என்வன் அவர்களை நோக்கி: உங்களுக்கு ஒன்றுந் தெரியாது; ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் என்றான்”

“இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூத ஜனங்களுக்காக மரிக்கப் போகிறாரென்றும் அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்”

“அந்நாள் முதல் அவரைக் கொலை செய்யும்படிக்கு ஆலோசனை பண்ணினார்கள்” (யோவான் 11:47-53).

ஜனங்கள் இயேசுவின் போதனைகளுக்கு ஏற்றவாறு கிரியை செய்து, அவரை தங்களுக்கு ராஜாவாக்க விரும்பினார்கள். அவருக்கான அவர்களுடைய துதி முன்னுரைக்கப்பட்டு அது நிறைவேறியது:

“சீயோன் குமாரத்தியே, மிகவும் களி கூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும், இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்” (சகரியா 9:9).

“மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டு: ஓசன்னா கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்”

“அல்லாமலும் சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக்குட்டியின் மேலும் ஏறிவருகிறார் என்று எழுதியிருக்கிற பிரகாரமாக இயேசு ஒரு கழுதைக்குட்டியைக் கண்டு அதின்மேல் ஏறிப்போனார்” (யோவான் 12:12-15).


ஒரு சிநேகிதனாய் இயேசு சத்துருக்களுக்கு காட்டிக் கொடுக்கப்படுதல் சங்.4:9-ல் விவரிக்கப்பட்டிருக்கிறது. அதன் நிறைவேற்றம் மத்.26:15-ல் விவரிக்கப்பட்டிருக்கிறது. காட்டிக் கொடுக்கப்படுவதற்கான விலைமதிப்பு முப்பது வெள்ளிக்காசாக இருந்தபோதிலும், அந்த பணத்தைக் கொண்டு சம்பவமாக என்ன நடந்தது என்பது சகரியா 11:12,13-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்.26:15 மற்றும் மாற்கு 14:10,21 வசனப்பகுதிகள் ஒவ்வொன்றும் சம்பவித்தவைகளை விளக்கமாக வெளிப்படுத்துகின்றன.

# இரட்சகர்
## Saviour

-Betty

பெண்கள் பகுதி




தேவனோடு கூட முன்பே இருந்தவரும் "வார்த்தை" ஆக இருந்தவருமாகிய கிறிஸ்து உலகத்திலே தேவகுமாரனாக மாம்ச சரீரத்துடனே பிறந்தார். அவருக்கு மனுஷிகத்தில் ஒரு தாய் இருந்தார் ஆனால் மனுஷிகத்தில் தகப்பன் இல்லை, அவருடைய பிதா தேவனாக இருந்தபடியால், மேசியா என்ற வார்த்தை எபிரெய மொழியில் "மாஷியாக்" தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று வழங்கப்படுகிறது. அவருடைய தாயாரும், யோசேப்பும் (வளர்த்த வகையில் தகப்பனாக இருந்தவர்) ஜனங்கள் தங்களுடைய சொந்த பட்டணத்தில் பதிவு செய்து வரிகளை செலுத்த வேண்டும் என்று இராயனால் ஒரு சட்டம் இயற்றப்பட்டிருந்தது. இந்த பிரமாணத்தின் காரணமாக இயேசு பிறந்த பொழுது அவர்கள் பெத்லேகேம் நகரத்தில் இருந்தார்கள்.

**இயேசுவின் பிறப்பை குறித்து பழைய ஏற்பாட்டிலிருந்த தீர்க்கதரிசனங்கள்**

"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா.5:2)

பெத்லகேமில் இயேசுவின் பிறப்பை குறித்து இந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமாக ஒரு தேவ தூதன் அறிவித்தான்: "பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்.2:10-11).

ஒருவர் வளர்ந்து வாக்குத்தத்தம் பண்ணினபடியே இராஜாவாக ஆவார் என்று பயந்ததினாலே அவரை அழிக்கும் முயற்சியாக, இயேசு பிறந்த உடனே எரே.31:15-ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை பெத்லேகேமில் புதிதாய் பிறந்த ஆண்பிள்ளைகள் அனைவரையும் கொலை செய்வதன் மூலமாக நிறைவேற்றினான்.

"அப்பொழுது ஏரோது தான் மந்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலை செய்தான்.

"புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள் என்று, எரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று" (மத்.2:16-18; எரே.31:15).

மரணத்திலிருந்து இயேசுவை பாதுகாக்கும்படியாக அவரை எகிப்துக்கு கொண்டு செல்லும்படி தேவனால் யோசேப்புக்கு சொல்லப்பட்டது.



விசுவாசிக்கவில்லை. அந்த சமயத்தில் வேதவாக்கியங்கள் நிறைவேறியது, யூதரல்லாதவர்கள் முழுவதுமாக நாத்திகர்களைப் போல செயல்பட்டனர். அதற்கு மேலும், கி.மு.200க்கு திரும்ப அழைத்துச்செல்லும் வேதாகமக் குறிப்புகளை, குறிப்பாக பழைய ஏற்பாட்டுப் பகுதியினையும் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக, வேதாகமம் சத்தியத்தை வெளிப்படுத்துகிறது, மேலும் தேவனுடைய பரிசுத்த வார்த்தை, அது திட்டவட்டமாக கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தாரென போதிக்கிறது.

பவுல், "அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள். பின்பு யாக்கோபுக்கும், அதன்பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்" (1கொரி.15:1-8) என எழுதினான்.

இப்போது யார் அந்த பவுல்? கிறிஸ்தவனாய் மாறுவதற்கு முன் சவுல் என்று அழைக்கப்பட்டவன் தான். அவன் ஒரு யூதனாயிருந்தான், கமாலியேலின் பாதத்தில் கற்றறிந்தவன்,ஒரு பரிசேயன், தன்னுடைய சமயத்தில் பக்திவைராக்கியமாயிருந்தவன் (பிலி.3:4-7). அந்தபடியே, சபையைத் துன்பப்படுத்தினவன், அதாவது, கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகும்வரை. பின்பு அவன் கிறிஸ்துவினிடத்தில் திருப்பப்பட்டான் (அப்.9:22). அதன்பின் அவன் தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும் உயிர்த்தெழுந்த கர்த்தரென்றும் பிரசங்கித்தான் (அப்.9:20; 17:18). ஒரு அவிசுவாசியாயிருக்கும் நிலையிலிருந்து விசுவாசியாக மாறுவதற்கு மிகத்துரிதமாகவும் சடுதியாகவும் திரும்புவது நம்புவதற்கு ஏதுவல்லாத நடக்கக் கூடாததாயிருந்திருக்கும் நிலையில், கிறிஸ்துவை தரிசிக்கையில், அவன் மெய்யாகவே கிறிஸ்து உயிர்த்தெழுந்த கர்த்தர் என்று உணர்ந்தான்.

உங்களுடைய நிலை என்ன? நீங்கள் கிறிஸ்து கல்லறையிலிருந்து எழுந்தாரென விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அவர் இன்றும் ஜீவிக்கிறார், ஒருநாளில் சபையாகிய தம்முடைய ஜனங்களுக்காகத் திரும்பி வருவார் என விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் ஒரு விசுவாசியாயிராவிட்டால், நீங்கள் விசுவாசியாக மாறும்படி உங்களுக்காக ஜெபிக்கிறோம். நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்தால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்வார் (மாற்.16:16; அப்.2:47).

**தினமும் தூங்குவதற்கு முன் பரிசுத்த வேதாகமத்தின் ஒரு பகுதியை வாசித்துவிட்டு பின்பு தூங்கச் செல்லுங்கள் உங்கள் நித்திரை இன்பமாயிருக்கும்**

## பாடம் -21 செங்கடல் சட்டங்கள்

Red Sea Rules *- Jerry Bates*




1. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதென்பது அதிசயிக்கத்தக்க பொறுப்பு தேவனுடைய ஆலோசனைகளில் ஒன்றையும் மறைத்து வைக்காமல் வெளிப்படுத்தினபடியால் எல்லாருடைய இரத்தப் பழிக்கும் நீங்களாயிருக்கிறேன் என்று எபேசு சபையின் மூப்பர்களைச் சந்தித்தபோது பவுல் அவர்களிடம் சொன்னார். அதன் பொருள் ஒரு போதகர் தேவனுடைய ஆலோசனைகளில் எல்லாவற்றையும் போதிக்காமல் அலட்சியம் செய்தால் ஒரளவுக்காகிலும் கவனிப்பவர்களின் இரத்தப்பழி அவருடைய கைகளில் இருக்கும்.

2. உங்கள் ஒவ்வொருவரையும் உங்கள் எதிர்காலத்தை நோக்கும்படி உற்சாகப்படுத்துகிறேன். மிகுதியும் நம்முடைய கடந்த காலத்தை நோக்கும் வழக்கத்தையே நாம் கொண்டிருக்கிறோம்.

நாம் பின்னோக்கிப் பார்த்து நாம் செய்த தவறுகளைக் குறித்தும், எடுத்த தவறான தீர்மானங்களைக் குறித்தும் துக்கப்படுகிறோம். நாம் விரும்பியபடி செயல்படாத வேலைகளை நினைத்து அதைரியப்படுகிறோம்.

இது ஒன்றும் புதிதல்ல. இஸ்ரவேல் மக்கள் ஒரு தேசமாக சரித்திரத்தில் இருந்தபோது இதைச் செய்தார்கள். எகிப்திலிருந்து வந்தபோது அவர்கள் மகிழ்ச்சியோடு தேவனைப் பின்பற்றினார்கள். ‘‘மகிழ்ச்சியான நாட்கள் மறுபடியும் வந்தது’’ ஆனால் அவர்கள் எதிர்பாராத இடத்துக்கு தேவன் அவர்களை நடத்திச் சென்றார். தேவன் அவர்களுக்கு முன்பாகக் கடலும், பின்னாக பார்வோனின் இராணுவமும் இருபக்கங்களிலும கடினமான மலைகளும் உள்ள இடத்துக்கு தேவன் அவர்களை நடத்திச் சென்றார். நாங்கள் எகிப்திலேயே தங்யிருக்கலாமே என்று அவர்கள் சொன்னார்கள். யாத்.14:12-ல் இஸ்ரவேல் மக்கள் மோசேயை நோக்கி நாங்கள் உனக்கு அப்படிச் சொன்னோமே என்றார்கள்.

ஆனால் தேவன் சொன்னார். முன்னேறிச் செல்லுங்கள். தேவன் இஸ்ரவேலுக்கு பூரண நம்பிக்கையை கற்றுக் கொடுக்க முயற்சித்தார். கடந்த காலத்திலிருந்து சம்பவங்களிலிருந்து கற்றுக் கொள். ஆனால் கடந்த காலத்திலேயே வாழாதே.

2. இஸ்ரவேலர் தன்னுடைய கடந்த காலத்திலேயே வாழந்தார்கள். பின்னாளில் பலமுறை எகிப்துக்கு திரும்பிச் செல்ல விரும்பினார்கள். உங்கள் ஒவ்வொருவரையும் எதிர்காலத்தை முன்னோக்கிப் பார்க்கும்படி உற்சாகப்படுத்துகிறேன். ஆனால் தேவனில் உள்ள விசுவாசத்தில் அவருக்கு சேவை செய்யும்படி முன் செல்லுங்கள்.

3. என்னவகையான தொல்லைகள் நம்மை எதிர்காலத்தில் எதிர்கொள்ளும் என்று நமக்குத் தெரியாது. தொல்லைகள் வந்தால் நாம் தவறு செய்துவிட்டோம் என்று அர்த்தமல்ல.

தேவனுடைய கனவுகளை நிறைவேற்றும்படி, யோசேப்பு கடத்தப்பட்டான். ஆகிலும் அடிமையாக விற்கப்பட்டான். எகிப்திய சிறையிலடைக்கப்பட்டான்.

இஸ்ரவேலின் இரண்டாவது அரசனாக அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீது பல வருடங்கள் இஸ்ரவேலின் படை வீரர்களால் பின் தொடரப்பட்டான்.

புயல்காற்றும் பொங்கியெழும் கடலலைகளும் பயங்கரமும் நிறைந்த இரவைச் சந்திக்க இயேசுவானவரின் கட்டளைப்படி கலிலேயாக் கடலில் பயணித்தனர்.

தேவசித்தத்தை நிறைவேற்றும்படி இயேசுவானவரே சிலுவையில் ஆணியடிக்கப்பட்டு மரிக்கும் வரை தொங்கினார்.



இயேசு சொன்னார். இந்த உலகத்தில் உங்களுக்கு உபத்திரவமுண்டு.

4. நன்றாக கண்டு கொள்ளுங்கள் நம்முடைய உபத்திரவங்களில் நம்முடைய விடுதலையைவிட தேவனுடைய மகிமையை பற்றியே அதிகக் கரிசனையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

தேவன் தம்முடைய வல்லமையை இஸ்ரவேலருக்கு விளங்கப்பண்ணும்படி ஒருவாய்பளிக்க அவர்களை அந்தக் கடினமான இடத்துக்கு நடத்திச் சென்றார்.

நம்முடைய இயற்கையான உணர்வு ஏன் இது எனக்கு சம்பவித்தது என்று கேட்பதே? இந்தக் குழப்பத்துக்குள் நான் எப்படி வந்தேன். மேலும் அதிலிருந்து எப்படி வெளியே செல்வேன்? என்பதுதான். இயேசுவானவருடைய நெருங்கிய நண்பன், மிகவும் நோயுற்றிருந்தான். உதவும்படி அவர் அழைக்கப்பட்டார். ஆனால் தாமதித்தார். அவர் வந்தபோது லாசருவின் சகோதரிகள் இந்நிகழ்ச்சியாக நீர் அங்கே இருந்தால் என் சகோதரன் மரித்திருக்க மாட்டான் என்றார்கள்.

ஆனால் இயேசு அதை வேறு விதமாக பார்த்தார். இயேசு சொன்னார் அந்த வியாதி தேவனுடைய மகிமைக்காக வந்திருக்கிறது.

5. ‘‘காயம் நிறைந்த வேதனைகள் சகிக்கக்கூடாதபடி தோன்றுவதில்லை. நாம் அவைகளை தவறான வெளிச்சத்தில் பார்த்தாலொழிய’’

6.எதிர்காலத்தை நாம் மிகத் தூரத்தில் பார்க்க இயலாது. நாம் தேவனில் முழு நம்பிக்கை வைக்க வேண்டுமென்பதை அவர் நம்மிடம் விரும்புவது.

செங்கடற்கரையில் இஸ்ரவேலர்கள் நின்றபோது தேவன் அவர்களுக்கு எளியதொரு திட்டத்தைக் கொடுத்தார். முன்னேறிச் செல்லுங்கள் (14:15).

எதிர்காலத்தில் என்ன இருக்கிறது என்பதை அவர்களால் மனதில் காணக்கூடாதிருந்தது. தேவன் அவர்களிடத்தில் எதிர்பார்த்ததெல்லாம் நிலையான காப்புத் தன்மையே.

படிப்படியாகவே தேவன் அவருடைய பிள்ளைகளை நடத்துகிறார். ஒவ்வொரு நாளும் தேவைகளைச் சந்திக்கிறார்.

1. அன்றன்றுள்ள ஆகாரத்தை எங்களுக்குத்தாரும்

2. ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறது இல்லை. எங்கள் புறம்பான மனிதனானது அழிந்தும். உள்ளான மனிதனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது (2கொரி.5:16).

7. ‘‘ஓரடி ஒரு சமயத்தில்’’ என்ற பாடலில் மூன்றாம் சரணங்களை வாசியுங்கள் தேவன் அவர்களை செங்கடல் மீது பிரயாணமாய்க் கடந்து செல்ல வைத்திருக்கலாம். ஆனால் அவர்கள் ஒரு சமயத்தில் ஒவ்வொரு அடியாய் வைத்து நடந்து சென்றார்கள். செங்கடற்கரையில் நீங்கள் தடைபட்டு நிற்கிறீர்களா? அவரை பூரணமாய் விசுவாசியுங்கள்.

7. இங்கேதான் தேவனுடைய அருளுக்கும் விசுவாசம் செயலுக்கும் வருகிறது.

8. விசுவாசத்தையும் தேவனுடைய அருளையும் பிரிக்க முடியாது. கர்த்தர் நம்மிடம் சொல்லியது நடக்கும் என்கிற விசுவாசமே நம்பிக்கை என்று ஒருவர் சொன்னார்.

ரோமர் 4:20-21 ரோமாபுரிக்கு பவுல் சென்றபோது மிகக் கடுமையான புயலடித்து கப்பலில் பயணித்தவர்கள் செத்துவிடுவோம் என்று பயந்தனர். ஆனால் பவுல் மிகவும் அமைதலாகவும் பரிசுத்தமான தோற்றத்துடனும் இருந்தார் (அப்.27:25). அவருடைய வார்த்தையை கவனியுங்கள். ஆனபடியினால் மனுஷரே திடமனதாயிருங்கள் எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன். எல்லாரும் பிழைப்பார்கள் என்று பவுலிடம் தேவன் சொல்லியிருந்தார். அது போதுமானது அது நடக்கும்.

9. ஒவ்வொரு நாளும் நாம் விசுவாசத்தால் வாழ்கிறோம். நாம் விசுவாசத்தால் நடக்கிறோம். தரிசித்து (பார்த்து) நடக்காமல் விசுவாசித்து நடக்கிறோம் (2கொரி.5:7).